9. அரசினர் தீர்மானங்கள்

(அ) திரு. பரிதி இளம்வழுதி மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக 30 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. தாங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229(அ)-ன்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். பிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் எழுந்து நின்றனர்.)

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு இன்னும் வரவில்லை. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மேற்படி அறிக்கையில் உரிமைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட கீழ்க்கண்ட பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229(ஏ)-ன்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது:

"திரு. பரிதி இளம்வழுதி அவர்களது செயல் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு நடைமுறை என்பதை இக்குழு கருத்தில்கொண்டு உறுப்பினர்கள் எந்தவிதமான அச்சுறுத்தலும் இன்றி, தங்களது கருத்துகளை அவையில் எடுத்து வைப்பதற்கு ஏதுவாகவும், இதுபோன்ற சக உறுப்பினர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நோக்கோடு அச்சுறுத்தும் வகையில் பேசுவதைத் தடுக்கும் வகையிலும், இதுபோன்ற செயல்கள் இனி வருங்காலங்களில் நடைபெறக்கூடாது என்ற எண்ணத்துடனும், மற்ற உறுப்பினர்களுக்கும் இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடனும் திரு. பரிதி இளம்வழுதி மீதான இந்த உரிமை மீறல் பிரச்சினைக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டுமென்று பெரும்பான்மையான குழு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அதற்கேற்ப அதிகப்படியான தண்டனை வழங்க வேண்டிய அளவிற்கு திரு. பரிதி இளம்வழுதியின் கொலைவெறி உணர்வுகள் நிறைந்த அவரது பேச்சும் செயலும் அமைந்திருந்தபோதிலும், பேரவை மாண்பினைக் கருதி திரு. பரிதி இளம்வழுதி அவர்களுக்கு குறைந்தபட்ச தண்டனையாக 30 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை மட்டும் வழங்கலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 5-30

திரு. பரிதி இளம்வழுதி பற்றிய உரிமை மீறல் பிரச்சினையை இப்போது எடுத்துக்கொண்டிருப்பதால், தீர்ப்பு படித்து முடிக்கும் வரை அனைவரும் அவரவர்கள் இடத்திலே இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் இன்று முன்மொழியப்பட்டு, பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற

இந்தப் பிரச்சினை பற்றிய இந்தத் தீர்மானத்தின்படி, அவையில் இருக்கும் திரு. பரிதி இளம்வழுதியை, அவைக் காவலர்கள் சென்னை மாநகரக் காவல் துறையிடம் உடனடியாக ஒப்படைக்குமாறு ஆணையிடுகிறேன். மேற்கூறிய தீர்மானத்தின்படி, திரு. பரிதி இளம்வழுதியை சென்னை மாநகரக் காவல் துறை உடனடியாகக் கைது செய்து 30 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை நிறைவேற்றுமாறு என்னுடைய வாரண்டை உடனடியாக இப்பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(தி.மு.க. உறுப்பினர்கள் கூச்சலிட்டுக்கொண்டு இருந்தனர். மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நின்று கொண்டிருந்தனர்.)

(ஆ) இந்து மற்றும் முரசொலி நாளிதழ்கள் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்து மற்றும் முரசொலி நாளிதழ்களின் மீதான அவை உரிமை மீறல் பற்றிய பிரச்சினை குறித்து உரிமைக் குழுவின் அறிக்கை. அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற இந்து மற்றும் முரசொலி நாளிதழ்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229(ஆ)-ன்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS